ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

शशाङ्कोत्तंस त्वां कृतविततिपूर्वं प्रतिदिनं
दयाम्भोधे याचे तदिदमिह संपूरय विभो ।
सदा दुष्टं कामप्रमुखनिलयं दुष्पथचरं
हठात् द्राक्कार्यं त्वत्पदगमिति यन्मे हतमनः ॥ २६ ॥

𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑍋𑌤𑍍𑌤𑌂𑌸 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌕𑍃𑌤𑌵𑌿𑌤𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌂
𑌦𑌯𑌾𑌮𑍍𑌭𑍋𑌧𑍇 𑌯𑌾𑌚𑍇 𑌤𑌦𑌿𑌦𑌮𑌿𑌹 𑌸𑌂𑌪𑍂𑌰𑌯 𑌵𑌿𑌭𑍋 ।
𑌸𑌦𑌾 𑌦𑍁𑌷𑍍𑌟𑌂 𑌕𑌾𑌮𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑌨𑌿𑌲𑌯𑌂 𑌦𑍁𑌷𑍍𑌪𑌥𑌚𑌰𑌂
𑌹𑌠𑌾𑌤𑍍 𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌦𑌗𑌮𑌿𑌤𑌿 𑌯𑌨𑍍𑌮𑍇 𑌹𑌤𑌮𑌨𑌃 ।

𑌦𑌯𑌾𑌮𑍍𑌭𑍋𑌧𑍇, கருணைக்கடலாய்விளங்கும்𑌹𑍇 𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑍋𑌤𑍍𑌤𑌂𑌸 சந்திரனை சிரோபூஷணமாகவுடைய ஹே பரமேசுவர ஒவ்வொரு தினமும் என்னால் செய்யப்பட்ட அனேகவந்தன பூர்வகமாய் தங்களிடம் நான் ஒன்றை யாசிக்கின்றேன். எல்லாமறிந்த தாங்கள் அதைப் பூர்த்திசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் யாசிப்பது யாதென்றால், காமம், குரோதம், லோபம், மதம், மாத்ஸர்யம் முதலானவைகளுக்கு இருப்பிடமாயும், எப்பொழுதும் கெட்டவழிகளிலேயே செல்லுகின்றதாயும், மிகவும் கெட்டதாயும், ஸகலதோஷங்களுக்கும் ஆச்ரயமாயும் இருக்கும் என்னுடைய மனதை சீக்கிரமாக எவ்வளவு சிரமம் நேர்ந்தாலும் அதைக் கவனியாமல் தங்களுடைய சரணங்களை விட்டு விலகாமல் எப்பொழுதும் அவைகளிலேயே வஸிக்கும்படி செய்யவேண்டுமென்பதேயாகும்.

தன்னுடைய மனமானது அவச்யம் செய்யவேண்டிய ஸ்ரீ பகவானுடைய சரணாரவிந்தத்தியானத்தைச் செய்யாமல் காமக்குரோதங்களுக்கிடுபட்டு அதிக பாபத்திற்குக்காரணமான கெட்ட காரியங்களில் போகிறபடியால் அதை ஸ்வாதீனப்படுத்தவேண்டுமென்று தாம் எவ்வளவு முயற்சி செய்தும் ஸாத்தியப்படாமலிருக்கிறதென்று தயவுசெய்து தாங்களே அதை அவ்விதம் விடாமல் தங்கள் சாரணாவிந்தங்களிலேயே இருக்கும்படி செய்யவேண்டுமென்று ஒரு பக்தர் பகவானிடம் வேண்டுகிறார்.

உபபத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

விபவ-ஸு மார்கழி-மீ ௧௫௨

## வேதாந்த ஸார ஸங்கிரஹம்.

(564-வது பக்கத்தொடர்ச்சி)

குரு:— சுருதியில் முக்தனைப்பற்றிக் கூறுமிடத்தில் அவன் மறுபடியும் திரும்புகிறதில்லை என்று முக்திக்கு நித்தியமாயிருக்கும் தன்மை கூறப்பட்டிருக்கிறது. பின்னும் அம்சமற்றது, ரூபமில்லாதது, ஆனந்தஸ்வரூபமாயுள்ளது, மிகவும் ஆச்சரியமாயுள்ளது என்று கூறும் சுருதிக்கும் விரோதம் வருகின்றது. மேலும் ஆத்மாவுக்குத் துக்கத்தை ஸ்வபாவமாக அங்கீகரித்தால் ஸுஷுப்திஅவஸ்தையில் ஒருவிதமான செய்கையும் இல்லாத ஸமயத்திலும் யோகிகளுடைய ஸமாதிநிலையிலும் துக்கம்தான் காணப்படும். அவ்விதம் அனுபவத்தில் காணப்படவில்லை, பின்னே முழித்தெழுந்திருந்தபிறகு நான் இவ்வளவு காலம்வரையில் ஸுகமாக நித்திரை செய்தேன் என்று ஸுகானுபவத்தையே ஸ்மரிக்கிறான். ஆகையால் ஆத்மாவுக்கு ஸுகந்தான் இயற்கையாகயேற்பட்டது. துக்கமென்பது மத்தியில் வந்ததென்று நீ அறிந்துகொள்.

சிஷ்:— ஸுகஸ்வரூபனாயிருக்கும் ஆத்மாவிற்கு துக்கம் என்பது எப்படி ஏற்பட்டது?

குரு:— சரீரபரிக்ரகத்தால் வந்தது, எந்தெந்த ஸமயத்தில் ஆத்மாவிற்குச்சரீரபரிக்ரகம் ஏற்படுகின்றதோ, அந்தந்த ஸமயத்தில் துக்கமும் உண்டு.

சிஷ்:— உலகில் மிகவும் சிறந்த பதவியைப்பெற்ற அரசர்முதலாயினோர்களுக்கும் சரீரபரிக்ரகத்தால் துக்கம் உண்டுதானா?

குரு:— அவச்யம் உண்டு, அவர்களுக்கும் சத்துருவினுடைய உபத்திரவத்தாலும் ராஜ்யகார்யங்களை நடத்துவதாலும்

பொருள் தான்யம் இவைகளின் குறைவாலும் எதிர்பாராத ஸ்திரீ, புத்திரன் முதலியோர்களுடைய மாணத்தாலும், தமக்கு ஏற்படும் ஜரை, மாணம் முதலியவைகளாலும் துக்கம் அவசியம் ஏற்படும். உலகில் சிலர் நாங்கள் சுகமாக யிருக்கிறோம் என்று கூறுவது மோகத்தால் கூறும் வீண் வாதமேயாகும்.

சிஷ்:— அக்ஞானத்தால் துக்கத்தை ஸுகமென்று எப்படி வியவகரிக்கமுடியும்?

குரு:— தலையில் பாரத்தை வகித்துக்கொண்டு வெகுதூரம்வரை யில் அவஸாமான கார்யத்தை உத்தேசித்து வேகமாக ஓடும் ஒருவனும், அவ்விதமே எப்போதும் பயிர்த்தொழில் செய்வது முதலிய வேலைகளைச் செய்வதே ஸ்வபாவமாயுள்ள ஸகல ஜனங்களும் தங்கள் தங்கள் கர்மாவானது துக்கரூபமாயிருந்தபோதிலும் மோகத்தால் அந்தந்த கர்மாவையும் ஸுகமாக நினைத்து மிகவும் ஸந்தோஷத்துடன் கானம் செய்கிறார்கள்; உத்ஸாகத்துடனும் இருக்கிறார்கள். ஆகையால் மோகத்தால் துக்கம்தான் ஸுகமாகத் தோன்றுகிறதென்று அறியவேண்டும்.

சிஷ்:— இவ்விதமானால் விவேகிகளான மஹான்களுக்கும் சரீரபரிக்ரகத்தால் துக்கம் உண்டென்று ஏற்படுகின்றதே. உண்டா?

குரு:— அவர்களுக்கும் பசி, தாகம் முதலியவைகளாலும் மழை வெய்யில்களாலும், வியாதியினாலும், பாம்பு, தேள், புலி முதலியவைகளாலும் துக்கம் ஏற்படுவது நிச்சயம் அவ்விதம் ஏற்பட்டாலும் அவிவேகிகளுக்கும், இவர்களுக்கும் வித்தியாஸமுண்டு. அதாவது இவ்விருவர்களிலும் வெளிப்படையான காரியத்தால் விசேஷம் ஒன்றுமில்லாவிட்டாலும் மனோவியாபாரத்தில் விசேஷம் உண்டு. விவேகியான அந்த மகாத்மாவானவன் ஸகலமான துக்கமும் அந்தக்கரணத்தினுடையதென்றும், ஆத்மாவினுடையதல்லவென்றும் ஸச்சிதானந்தஸ்வரூபமாய் விளங்கும் ஆத்மாவுக்கு அஸத்யமாயும், ஜடமாயும், துக்கஸ்வரூபமாயுமுள்ள அந்தக்கரணத்தினுடைய தர்மங்களோடு அற்பங்கூட ஸம்மந்தமே கிடை

யாது என்று சுருதி, யுக்தி, அனுபவம் முதலியவைகளால் நன்கு விசாரித்துத் தெரிந்துகொண்டிருக்கிறான். இக்கருத்தையே ஆத்மக்ஞானத்தையடைந்தமஹாபுருஷனானவன், ஒன்றிலும் பற்றற்றவன் என்று பிருகதாரண்யச்ருதி வெளியிடுகின்றது. ஆத்மா நிரவயவன் (அவயவமற்றவன்) ஸத்யஸ்வரூபன் என்பதுமுதலானவைகளை ஸுஷுப்தியவஸ்தைகளிலும் மௌனபாவத்துடன் இருக்கும் ஸமாதிகளிலும் அறியவேண்டும் விவேகமில்லாத அக்ஞானியான ஜீவாத்மாவானவன் சாஸ்திர ஆசார்யார்கள்மூலமாக ஆத்மஸ்வரூபத்தின் தத்துவத்தை நன்கு விசாரித்து அறிந்துகொள்ளாமல் தேகம் முதலிய ஜடபதார்த்தங்களையே ஆத்மாவாகவெண்ணி அனாத்மதர்மங்களான சுகதுக்காதிகளை ஆத்மாவினிடத்தில் ஆரோபணம் செய்தும் ஆத்மதர்மங்களான சச்சிதானந்தங்களை சரீரம்முதலிய அனாத்மாக்களில் ஆரோபணம் செய்தும் அக்ஞானத்தால் ஆத்மதர்மத்தை அனாத்மாவினிடத்திலும், அனாத்மதர்மத்தை ஆத்மாவினிடத்திலும் ஆரோபித்து நான் தேவன், நான் மனுஷ்யன், நான் பிராம்மணன், நான் பிரம்மசாரி, நான் க்ஷத்திரியன் நான் சூத்திரன் என்கிற இவை போன்றவைகளால் ஜாதி வர்ணாச்ரமாபிமானியாக இருக்கிறான். (தொடரும்) உபபத்திராதிபர்.

௳

## தஞ்சாவூர்ஜில்லா பிராம்மணர் மகாநாடு, கும்பகோணம்

1928-ஞு டிஸம்பர்-மீ 16௳ ஞாயிற்றுக்கிழமை கும்பகோணத்தில், சென்னை மகா-ள-ள-ஸ்ரீ திவான்பஹதூர், T. R. இராமச்சந்திர அய்யர் அவர்கள் அக்கிராஸனத்தின்கீழ் நடைபெற்ற "தஞ்சாவூர் ஜில்லா பிராம்மணர் மகாநாட்டில்" நிறைவேறிய தீர்மானங்கள்.

I (1) எந்த சமாஜத்தாரும் தமது மதக்கொள்கைகள், புராதன ஆசாரங்கள், இவைகளினின்றும் பிரிக்கமுடியாதபடி சம்பந்தமுடையதென்று கருதும் எந்த விஷயத்திலும், எந்த சட்டசபையும்—அதிலும், பலஜாதி மதஸ்தர்கள் அடங்கிய நமது சட்டசபைகள்—எவ்விதத்திலும் பிரவேசிக்க அதிகாரமில்லையென்று இந்த மகாஸபை உறுதியாக அபிப்பிராயப்படுகிறது.

(2) இனி ஏற்படக்கூடிய எவ்வித அரசியல் அமைப்புத் திட்டத்திலும், இந்நாட்டிலுள்ள எந்த சமாஜத்தாருடைய மதக் கொள்கைகளையும் ஆசாரங்களையும் எவ்விதத்திலும் சட்டசபைகளும் கவர்ன்மெண்டாரும் பாதிக்கும்படியான காரியம் எதுவும் செய்யத்தகுதியற்றதென நியமம் ஏற்படுத்தவேண்டுமென்றும், இந்த இன்றியமையா உரிமையை ஏற்படுத்தவேண்டியதற்கான முயற்சிகள் எல்லாம் உடனே கைக்கொள்ளவேண்டும் என்றும், இந்த மகாசபையின் தீர்க்கமான அபிப்பிராயம்.

சென்னை அட்வொகேட் பிரும்மஸ்ரீ K. பாலசுப்பிரமணிய அய்யாவர்களால் பிரேரிக்கப்பட்டு, தஞ்சாவூர் அட்வொகேட் பிரும்மஸ்ரீ T. கோதண்டராம அய்யங்கார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டது.

II. (1) ஹரவிலாஸ சாரதர், டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி இவர்கள் கொண்டுவந்திருக்கும் விவாஹமசோதாக்களை இம்மகாசபையார் கண்டிக்கிறார்கள். அம்மசோதாக்கள் சட்டமாகும் பக்ஷத்தில், ப்ரௌடையாகுமுன் கன்னிகைகளுக்கு விவாஹம் பண்ணிவைக்கவேண்டுமென்ற சாஸ்த்ரவிதி குலைந்து, விவாஹ ஸம்ஸ்காரத்தின் ஸ்வரூபம் அழிந்துபோய், விவாகம் பண்ணிக்கொள்வதா இல்லையா என்பது அவரவர் இஷ்டத்தைப் பொறுத்ததாய் வ்யவஸ்தை கெட்டுப்போய்விடுமென்றும், இந்துக்களுள் விவாகமென்பது ஒருபுருஷனும் ஸ்திரீயும் தம் இச்சைக்காகச்செய்து கொள்ளும் வெறும் ஒப்பந்தம்போல் கருதுவது தவறு என்றும், சாஸ்த்ரங்களை நிர்ணயிக்க லௌகிகர்களுக்கு எவ்வித யோக்யதையுமில்லையென்றும் வற்புறுத்துகிறார்கள். பால்யவிவாஹத்தால் விளைந்ததாகச் சிலர் சொல்லும் கேடுகள் ஒன்றும் அதுகாரணமாக ஏற்பட்டவையல்லவென்றும், இப்போது ஜனங்கள் எங்குமே உலகமுழுவதும் வேறு பல காரணங்களால் துன்பப்படுவதை யொத்து இந்நாட்டிலும் அதேமாதிரி காரணங்களாலேயே ஈனஸ்திதி உண்டாயிருக்கிறதென்றும், தம் ஸமாஜக்கட்டுகள் குலைந்து கலகலக்கும்படி, அவிவேகத்தால் தம் நிலைமை நழுவி, பிறர் பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டதாலும், ஹிதமான சாஸ்த்ர விதிகளையும் ஆசாரங்களையும் மறந்து, ஆசை போனபடியெல்லாம் ஆகாரங்களையும், பானங்களையும் பண்ணும் மதிஹீனத்தாலுமே, நமது ஜனங்களுக்கு க்ஷேமக்குறைவுகள் உண்டாயிருக்கின்றனவென்றும், இம்மகாசபையார் கருதுகிறார்கள்.

(2) விவாஹ விஷயத்தில் மேற்கண்ட விதம் சட்டப்பிரவேசம் ஸர்வதா உதவாதென்றும், அவசரக்காரர்களான அவிவேகிகளின் வார்த்தையை ஆதாரமாய்க்கொண்டு எதுவும் செய்துவிடலாகாதென்றும், பரம்பரைப் பழக்கத்தாலும், உள்ளுணர்ந்த உறுதியுடனும், தம் விவாக முறைகள் மனிதர் நீதியையும் கடவுள் ஆக்ஞையையும் தழுவி அமைந்தவைகள், என்று எண்ணி நடந்து வரும் மகாஜனங்களின் மனக்கருத்தை எளிதாய் தள்ளிவிடலாகாதென்றும், கவர்ன்மெண்டாருக்கும், மற்றவர்களுக்கும் இம் மகாசபையார் எச்சரிக்கை கூறுகிறார்கள்.

(3) சட்ட நிர்ப்பந்தம் என்பது எப்போதுமே பின் நிற்கும் அடி பலத்தைச் சார்ந்ததாகையாலும், தம் மதத்தையண்டின ஸமாஜசம்பிரதாயமாய் நீண்டகாலமாய் யாவரும் ஒப்பி நடத்தி வரும் விவாஹமுறையை மேற்கண்ட மசோதாக்கள் திடீரென தண்டனைக்குட்படுத்தும் குற்றமாக்கும் நோக்கமுடையதாயிருப்பதாலும், மகாஜனங்களின் மதாசாரங்கள் விஷயமாய் இதுவரையில் கவர்ன்மெண்டார் கெட்டியாய்க் கைக்கொண்டிருந்த நடுநிலைமையைத் தலைகீழாய்ப் புரட்டுவதாயிருப்பதாலும், அவைகள் ஆதரவுக்குத் தகுதியற்றவையென்றும் சட்டசபையின் அதிகார வரம்புக்கு வெளிப்பட்டதென்றும் உணர்ந்து அம்மசோதாக்களை எல்லாச் சட்டசபை மெம்பர்களும் நிராகரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறது.

திருவாங்கூர் ஸமஸ்தானம், பென்ஷன், திவான் பேஷ்கார், பிர்ம்மஸ்ரீ N. சுப்ரமண்ய அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு, மன்னார்குடி பிர்ம்மஸ்ரீ சேஷாத்ரிசாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ அஹோபிலமடம் வித்வான் இஞ்சிமேடு ஸ்ரீ-உ-வே. ரெங்கநாதாசாரியஸ்வாமிகளாலும் மன்னார்குடி பிர்ம்மஸ்ரீ மஹோபதேசகர் ராமஸ்வாமிசாஸ்திரிகளாலும், பிர்ம்மஸ்ரீ கிருஷ்ணபட்டாசாரியாராலும், பிர்ம்மஸ்ரீ அக்நிஹோத்ரம் தாததேசிகாசார்ய ஸ்வாமிகளாலும் ஆதரிக்கப்பட்டு ஏகோபித்து நிறைவேறியது.

III. (1) இப்போது ஆலோசனையிலிருந்துவரும் "ஸம்மத வயது மசோதா" ஸம்பந்தமாக விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டியில், ஷை சட்டத்தில் மாறுதலேற்பட்டால் விசேஷமாய் பாதிக்கும்படியான நிலைமையிலுள்ளோர்களின் பிரதிநிதிகள் ஒருவருமே இல்லையென்றும், அக்கமிட்டி மெம்பர்களில்

அநேகர் தாங்கள் நடத்தும் விசாரணை முடியும்முன்னமேயே தங்கள் ஸ்தானத்திற்குரிய நடுமனதைக் கூச்சமின்றி விட்டு, பொதுக்கூட்டங்களிலும், தம்சாரார் அளிக்கும் விருந்துகோஷ்டிகளிலும், பேசிவரும் பேச்சுகளிலிருந்து, ஷை மசோதாவுக்கு ஆதரவு உண்டாக்குவதற்கே வெளிக்கிளம்பியிருப்பவர்கள்போல காணப்படுகிறார்களென்றும், இம்மஹாஸபை உறுதியான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகிறது.

(2) ஷை கமிட்டிமுன் ஆஜரான ஸாக்ஷிகளிற்சிலரை ஷை கமிட்டிமெம்பர்களில் சிலர் விசாரித்த தோரணையைப்பார்த்தால், அவர்கள் நேர்மையை தப்பியும், பார்ப்பவர்களுக்கு இவர்கள் பக்ஷபாதத்துடன் இருக்கிறார்கள் என்று மனதில் படும்படியாயும் நடந்துகொண்டார்களென்றும் சாஸ்திரவரம்புகளுக்குட்பட்டு நடப்பவர்களின்சார்பாக விசாரிக்கப்பட்ட சாக்ஷியம் போதாதென்றும், ஷை கமிட்டியார் விசாரிப்பதற்கர்ஹமுள்ள அநேகர்களைக் கூப்பிடவில்லையென்றும், முக்கியமாய் பிராம்மண ஸ்திரீகளின் அபிப்பிராயத்தை அறிய எவ்வித எத்தனமும் பண்ணப்படவில்லையென்றும் இம்மஹாஸபை அறிவிக்கிறார்கள்.

மன்னார்குடி பென்ஷன் சப்-ஜட்ஜ் ப்ரம்மஸ்ரீ T. ஸ்ரீநிவாஸ அய்யங்காரால்பிரேரேபிக்கப்பட்டுத்திருவிடைமருதூர் பென்ஷன் தாசில்தார் இராமச்சந்திரய்யர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, ஏகோபித்து நிறைவேறியது.

IV. நமது ஸநாதன தர்மத்திலும் தர்மசாஸ்த்ரங்களிலும் நம்பிக்கையுள்ள எல்லா பிராம்மணர்களும் உடனே எல்லாகிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள பிராம்மண ஸமுதாய அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும்பொருட்டு, அங்கங்கே சென்று ஸமஸ்த புருஷர்களிடத்திலும் ஸ்திரீகளிடத்திலும் கையெழுத்துக்கள் வாங்கி, அதிகாரிகளிடம் சேர்க்கும் பொருட்டு கும்பகோணம் தர்மப்பிரசாரக ஸபை காரியதரிசியிடம் அனுப்பிவைக்கும்படி இம்மகாசபை கேட்டுக்கொள்ளுகிறது.

அக்ராஸனர் பிரேரேபணையின்பேரில் ஏகோபித்து நிறைவேறிற்று.

V. பிராம்மணப் பையன்கள் நிர்ப்பந்தமாய் ஒவ்வொருவரும் தவறாமல் ஸம்ஸ்கிருத பாஷையை அப்யஸிக்கவேண்டியதற்கு எல்லாவிதத்திலும் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும்,

அவர்கள் நித்தியகர்மாக்களுக்கு உபயுக்தமான வேதபாகங்களை யாவது ஸம்பிரதாய பத்ததியில் அத்தியயனம் செய்விக்கவேண்டுமென்றும், இம்மகாஸபை வற்புறுத்துகிறது.

2. தங்கள் ஜாதிக்குரிய பரம்பரை தர்மத்தைஅநுசரித்துப் பிராம்மணர்கள் யாவரும் அடங்கிய வாழ்வுள்ளவர்களாயும்,ஆத்ம குண ஸம்பத்தியைத் தேடுபவர்களாயுமிருக்க வேண்டுமென்றும், விவாகம் முதலிய விசேஷங்களில் விரிந்த செலவுகளை விலக்க வேண்டுமென்றும் இம்மகாசபை கோருகிறது.

ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான்பிரும்மஸ்ரீ ப.பஞ்சாபகேசசாஸ்திரிகளால் பிரேரேபிக்கப்பட்டு, சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ வைத்தியனாத சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு, ச்ரௌதபூஷணம் பிரும்மஸ்ரீ கிருஷ்ணதீக்ஷிதரால் ஆதரிக்கப்பட்டு, ஏகமனதுடன் நிறைவேறியது.

VI. வேறு எந்த ஸமாஜத்தாருடைய நன்மையையும் எவ்விதத்திலும் பாதிக்கும்படியான உத்தேசங்கள் இம்மகாஸபைக்கில்லையென்றும், இதர ஸமாஜத்தாருக்குமேல் எவ்விதமான ஐஹிக லாபமும் அடையவேண்டுமென இம்மகாசபை கருதவில்லையென்றும், தங்கள் மதக்கொள்கைகளுககும் ஆசாரங்களுக்கும் விரோதமில்லாமல் எல்லா பொதுஜன வ்யவஹாரங்களிலும் கலந்து, ஒத்துழைக்க ஸித்தமாயிருக்கிறார்களென்றும் இம்மகாசபையார் தெரிவிக்கிறார்கள்,

திருக்களாவூர் மிராசுதார் பிர்ம்மஸ்ரீ T. L. ஸாம்பய்யர்B.A. B.L. அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, மாயவரம் பிர்ம்மஸ்ரீ கிருஷ்ணஸாமி அய்யரால் ஆமோதிக்கப்பட்டு. ஏகோபித்து நிறேவேறியது.

VII. மேற்கண்ட ஸம்மத வயதுமசோதா, விவாஹமசோதாக்களால் விளையக்கூடிய அநர்த்தங்களைச்செவ்வையாய் உணராமல், அவைகளுக்கு சார்பாக இருக்கும் எல்லா சட்டஸபை மெம்பர்களையும் இம்மஹாஸபை கண்டிக்கிறதென்றும், இனி மஹாஜனங்களின் மதஸம்பந்தமானதும், மதவுணர்ச்சியைப் புண்படுத்தக்கூடியதுமான எந்தக்காரியத்தையும் தாம் சட்டஸபையில் செய்வதில்லையென்று உறுதிப் பிரதிக்ஞை யார் முன்னேயே கொடுக்கிறார்களோ, அவர்கள்மாத்திரமே சட்டஸபைகளில் பிரவேசிக்கும்படி எல்லா பிராம்மணர்களும் "வோட்" செய்தும், பிறர்

வோட்செய்யும்படி செய்தும், எல்லாப் பிரயத்னங்களையும் மேற்கொள்ளவேண்டுமென்றும் இம்மகாஸபை வற்புறுத்துகிறது.

பிரம்மஸ்ரீ U. P. கிருஷ்ணமாசாரியாரால் பிரேரேபிக்கப்பட்டு, உப-வே. பிர்ம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸதாதாசாரியாரால் ஆமோதிக்கப்பட்டு தஞ்சாவூர் அட்வொகேட் பிர்ம்மஸ்ரீ R. ராமசேஷய்யரால் ஆதரிக்கப்பட்டு ஏகோபித்து நிறைவேறியது.

VIII. பிரத்யேகமாய் அந்தந்த ஸமாஜத்தார்களுக்கு உரித்தான விஷயங்களில் சட்டங்கள்மூலமாய்பிரவேசிப்பதும் நிர்பந்திப்பதும் தகுதியற்றதென்று இந்துமஹாஜனங்களின் பெரும்பான்மையோரின்கருத்தாயிருப்பினும், 'நூதனமார்க்கப்' பற்றுள்ளவர்களெனச் சொல்லிக்கொள்ளும் சிலர்களின் ஆளுகையில் அநேக பத்திரிகைகள்-அதிலும் முக்கியமாய் "ஹிந்து" தினசரி பத்திரிகை-நடந்துவருவதாலும், அப்பத்திரிகைகள் "சீர்திருத்தக்கக்ஷிக்கு" விரோதமான ஸமாசாரங்களையும் உபந்நியாஸங்களையும், வெளிப்படுத்தாமல் ஒரே நோக்கத்துடன் தடைசெய்துவருவதாலும், மஹாஜனங்களின் உண்மைக்கருத்து தாராளமாய் வெளிப்பாவவில்லையென்று இம்மகாஸபை உறுதியாய் எண்ணுகிறது.

மாயவரம் பிர்ம்மஸ்ரீ கிருஷ்ணஸாமி அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு. செம்மங்குடி பிர்ம்மஸ்ரீ வாஞ்சிநாதய்யரால் ஆமோதிக்கப்பட்டு, கும்பகோணம் அட்வோகேட் பிர்ம்மஸ்ரீ N. திருவேங்கடத்தய்யங்காரால் ஆக்ஷேபிக்கப்பட்டு, பிறகு ராவ்பகதூர். N. கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரால் ஆதரிக்கப்பட்டு, ஐந்துபேர் மாத்திரம் ஆக்ஷேபிக்க மற்றெல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறியது.

IX. பிரும்மஸ்ரீ T. R. இராமச்சந்திரய்யர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் "வேதசாஸ்த்ரோஜ்ஜீவினி" என்னும் ஸர்வவித்யாலய ஸ்தாபனகாரியத்தை இம்மகாஸபை பூர்ணமாய் ஆதரிப்பதுடன், அக்காரியம் ஸம்பூர்ணமாய் நிறைவேறுவதற்கான திரவிய ஸஹாயமும் மற்றெல்லாவித ஸஹாயங்களும் எல்லாப் பிராமணர்களும் புரியவேண்டுமென்றும், இதுமுதல் மூன்று வருஷத்துக்குள் 12 லக்ஷம் ரூபாய் சேகரிக்கும்படிக்கும் இம்மகாசபை வேண்டுகிறது.

மூடிகொண்டான் பிரும்மஸ்ரீ M. ராமய்யரால் பிரேரேபிக்கப் பட்டு பிரும்மஸ்ரீ அபிநவபட்டபாண R. V. கிருஷ்ணமாசாரிய ரால் ஆமோதிக்கப்பட்டு, ஏகோபித்து நிறைவேறியது.

X. பிராம்மணர் தர்மங்களையும் வித்யைகளையும் ஆதரிக்கவும், பாதுகாக்கவும், மத, ஸமூஹ, ராஜீயவிஷயங்களில் வேதசாஸ்த்ர வரம்புக்குட்பட்டு நடப்பவர்களின் அபிப்பிராயங்களைப் பிரசாரப் படுத்துவதற்கு உபயோகமாயிருக்கவும் ஒரு பத்திரிகை உடனே ஸ்தாபிக்கவேண்டுமென்றும், அவ்விதம் பத்திரிகை சீக்கிரம் ஸ்தா பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய பிரும்மஸ்ரீ (1) ராவ் பகதூர் N. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,(2 புரொபஸர் K. ஸுந் திரராம அய்யர், (3) S. மகாலிங்க அய்யர், (1) G. V. வெங்கட்ட ராம அய்யர், (5) அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார், (6) M. K. வைத்தினாதய்யர் இவர்களை ஒரு கமிட்டியாக நியமிக் கிறார்களென்றும் இம்மகாசபை தீர்மானிக்கிறது.

கும்பகோணம் அட்வோகேட் (சேங்காலிபுரம்) S. சீனிவாஸ அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு, நாகப்பட்டணம் பிர்ம்மஸ்ரீ வெங் கட்டராம சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு, பிரும்மஸ்ரீ ஸ்ரீநிவா ஸதாதாசாரியரால் ஆதரிக்கப்பட்டுஏகமனதுடன் நிறைவேறியது.

XI. பிராம்மணர் தர்மங்களையும் க்ஷேமங்களையும் பாதுகாப்ப தற்காக "தஞ்சாவூர் ஜில்லா பிராம்மணர் ஸபை" ஒன்று உடனே ஸ்தாபிக்கவேண்டுமென்றும், இம்மகாசபைக்கு வந்திருக்கும் பிரதிநிதிகளெல்லாம் அந்த ஸபையின் முதல் அங்கத்தினர்களாக வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானிப்பதுடன், ஜில்லா விலுள்ள பிராம்மணர்களெல்லாம் அங்கத்தினர்களாக சேரும் படி கேட்டுக்கொள்கிறது. ஜில்லா சபை ஸ்தாபிப்பதற்கு பிரும்மஸ்ரீ G.V. வெங்கட்டராம அய்யரையும், அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாச்சாரியாரையும்கமிட்டியாக'நியமித்திருப்பதால், கூடியசீக்கிரம் ஷையார் அச்சபை அமைப்புக்குரிய விதிகளை நிர்ணயித்து சபை முன் அங்கீகாரம் கேட்கவேண்டுமென்றும், இம்மகாசபை தீர்மானிக்கிறது.

ரிடைர்ட் ஹெட்மாஸ்டர் பிரும்மஸ்ரீ R. ஸ்வாமிநாதய்யர் பிரேரேபித்து,பிரும்மஸ்ரீ C.R கிருஷ்ணஸாமி அய்யங்கார் ஆமோ தித்து, ஏகமனதுடன் நிறைவேறியது.

XII. "இராஜாங்க பலத்தைக்கொண்டுமகாஜனங்களின் மதக் கொள்கைகளையும், ஸமாஜ சம்பிரதாயங்களையும் மாற்றிவிடலா மென்று அர்த்தம் கொள்ளக்கூடிய "நேருகமிட்டியாரின் "ரிபோர்ட்டிலுள்ள வாக்கியங்களை இம்மகாசபை கண்டிக்கிறது"

மன்னார்குடி முனிஸிபல் சேர்மென் பிரும்மஸ்ரீ T. C. குரு ஸ்வாமி அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு, பிரும்மஸ்ரீ U. P. கிருஷ்ண மாசாரியரால் ஆமோதிக்கப்பட்டு, ஏகமனதுடன் நிறைவேறியது.

XIII. "இதர ஜில்லாக்களிலுள்ள பிராம்மணர்களும் இம் மாதிரி மகாசபைகள் கூட்டிப் பிராம்மண ஸமூகத்தின் அபிப்பிரா யங்களை வெளியிடவேண்டுமாக இம்மகாசபை கேட்டுக்கொள் ளுகிறது.

அக்ராஸனர் பிரேரேபித்து ஏகோபித்து நிறைவேறியது.

XIV. "நமது பெண்குழந்தைகள் தற்காலத்திய பள்ளிக் கூடங்களில் பயிலும் படிப்பானது ஸ்திரீ தர்மங்களைப் புகட்டுவதா யிராததோடுகூட, ஸநாதனதர்மத்தையும், ஆசாரங்களையும் அழிக் கக்கூடியதாயிருக்கிறதென்றும். தற்போதையப் பெண்கல்வி முறையைப் பரிசோதித்துப்பெண்கல்வி எத்தன்மையும் நோக்க மும் உள்ளதாயிருத்தல் வேண்டுமென்று யோசனைகள் கூற பிர்ம்மஸ்ரீ 1. புரொபஸர் K. ஸுந்தரராமய்யர், 2 ராவ்பகதூர் N. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், 3. R. ஸ்வாமிநாதய்யர், 4. M. K. வைத்திநாதய்யர், 5. S. மஹாலிங்கய்யர், (கமிட்டியைக் கூட்டுவோர்) 6. அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார் இவர் களை (இவர்கள் அபேக்ஷிப்பவர்களையும் சேர்த்துக்கொள்ளும்படி யான அதிகாரத்துடன்) கமிட்டியாக நியமிக்கிறதென்றும் இம் மஹாஸபை தீர்மானிக்கிறது."

ராவ்பகதூர் S. அப்புசாஸ்திரிகளால் பிரேரேபிக்கப்பட்டு, மாயவரம் பிர்ம்மஸ்ரீ T. S. நடேசசாஸ்திரிகளால் ஆமோதிக்கப் பட்டு ஏகமனதுடன் நிறைவேறியது.

XV. "இராஜாங்க உத்தியோக நியமன விஷயத்திலும், மேற் பதவிகளுக்கு உயர்த்தும் விஷயத்திலும், வகுப்பைப்பொறுத்து பக்ஷபாதம் பண்ணுவதென்ற இப்போது ஸமீபகாலத்தில் கவர்ன் மெண்டார் அங்கீகரித்திருக்கும் முறையை, இம்மகாசபை உறுதி

யாய்க்கண்டிப்பதுடன், இந்த நீதிக்கேடான முறையை அநுஷ்டிப்பதால் இராஜாங்கக் காரியங்களெல்லாம் ஊழற்பட்டு, ஆட்சி முறை திறமைகெட்டு, அவலப்பட்டுப்போய்விடுமென்றும் இம்மகா சபை அபிப்பிராயப்படுகிறது"

அக்ராஸனர் பிரேரேபித்து ஏகமனதுடன் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறியது.

கும்பகோணம், 22—12—28

R. ஸ்வாமிநாதய்யர்
M. K. வைத்தினாதய்யர்,
கோபாலதேசிகாச்சாரியார்,
S. மகாலிங்கய்யர்,
காரியதரிசிகள்.

---

# ஸந்தியாவந்தனம்.

(510-வது பக்கத்தொடர்ச்சி)

இம்மாதிரி தேக ஆரோக்யத்திற்கும் ஆயுள்விருத்திக்கும், ஸாதனமான பல ஆசார அநுஷ்டானங்களை ஸந்தியாவந்தனம் முதலிய கர்மங்களோடு நமது முன்னோர்கள் இணைத்திருக்கிறார்கள். அதை அறியாமல் நாம் ஸந்தியாவந்தனத்திற்கு லீவ் கொடுத்துவிட்டபடியால் தேகஆரோக்யமும் ஆயுள்விருத்தியும் தாங்களே (French leave) லீவு எடுத்துக்கொண்டுவிட்டன (அவைகளே நம் அனுமதியன்னியில் போய்விட்டன.) தற்காலம் பிராணாயாமத்தின் மஹிமையை அமெரிக்காமுதலிய மேனாட்டார் அறிந்து அதைப் பள்ளிக்கூடங்களில் ஒரு கட்டாயப்பாடமாக Breathing Exercise என்ற பெயருடன் ஏற்படுத்தியுள்ளார். இம்மாதிரி நமது சாஸ்திரங்களின் உண்மையை மேனாட்டார்கள் அறிந்து நமக்குப் போதித்தால்தான் நம்மவர்களுக்குப்பத்தியமாகவிருக்கிறதேயொழிய நமது ஆசாரியர்களும், பெரியோர்களும் அதே விஷயத்தைச் சொல்லும்போது செவி சாய்ப்பதில்லை. இது காலத்தின் கோலமேயாகும்.

(தொடரும்) M. ராமராவ்.

---